மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, சென்னை உயர்நீதி மன்றத்தில் தலைமை அலுவலகம் இருக்கிறது. எங்கெங்கு அந்த வேலையிருக்கிறதோ அங்கேயெல்லாம் போலீஸ் அதிகாரிகள் கண்காணித்து முடிவிலே உயர்நீதிமன்ற அளவிலேதான் முடிவெடுக்கப்படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இம்மாதிரி கண்காணிப்பதன் மூலம் அந்த ஊழியர்கள் மேல் பல நடவடிக்கைகள் எடுத்ததற்குப் பிறகு கூட அவர்கள் மேல் எப்போதும் கேஸ் இருந்தால் குறைந்த பட்ச தண்டனையே 2 வருஷம் இருக்கிறதே, அதை மாற்ற ஏதாவது முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தண்டனைப் பொறுத்தவரையில் எல்லோருக்கும் பொதுச்சட்டம் இருக்கிறது. சட்டத்தின் அடிப்படையில் நீதிமன்றங்கள் நிர்ணயிக்கின்றன. அந்தச் சட்டத்தில் மாறுதல் செய்ய வேண்டுமென்று நினைத்தால்தான் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, may I know from the Hon. Minister the number of cases that have been taken up by this Cell and the number of cases disposed of by them?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதுபற்றித் தகவல் இல்லை.

Petitions from employees of Tamil Nadu Record Office

*166 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Chief Minister be please to state—

(a) whether petitions dated 22nd May 1970 and 3rd June 1970 have been received by the Government from employees of hte Tamil Nadu Record Officer;

(b) if so, the details thereof ; and

(c) the action taken thereon?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) சார்பு நிலைப் பணியாளர்களைத் துன்புறுத்தவதாகவும், நிரப்பப்படாத பதவிகளில் பணியாளர்களை நியமனம் செய்வதில் முறை கேடாக நடப்பதாகவும், அரசு ஜீப், பொதுப்பணம், அவருடைய அதிகாரங்கள் ஆகியவற்றைத் தவருகப் பயன்படுத்துவதாகவும், ஆவணக் காப்பக இயக்குநரின் மேல், அந்த முறையீடுகளில் குற்றம் சாட்டப்பட்டிருந்தன.

(உ) அரசுச் செயலர் ஒருவர் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்டு, அவரின் பரிந்துரைகளுக்கு ஏற்ப, இயக்குநரால் அவருடைய பணியாளர்களின் மீது சுமத்தப்பட்ட தண்டனைகள் மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும் சில குற்றச்சாட்டுக்கள், குறித்து விசாரணை அதிகாரியின் பரிந்துரைக்கு ஏற்ப, இயக்குநர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.